*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு திரு. சித்தன் அவர்கள் கூறியது, அவர்கள் செய்தது தவறு, தண்டிக்கப்பட வேண்டியது தான் என்பதை ஒத்துக் கொண்டார்கள். தண்டனையைக் குறைக்கக் குறைக்க மேலும் மேலும் கோஷங்கள் போடவும் துண்டு பிரசுரங்கள் போடவும் தைரியம் ஏற்பட்டு விடும், பயம் ஏற்படாது. அதற்கு ஊக்கம் தருவதுபோல் இருக்கக் கூடாது. ஆனாலும் ஒரு நாள் போதும் என்ற உணர்வு மன்றத்தினரிடம் இருக்கும் காரணத்தால் தீர்மானத்தில் 'மூன்று நாட்கள்' என்று இருப்பதை 'ஒரு நாள்' என்று திருத்திக் கொள்ளலாம்.

எனவே, நான் உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க முன்பு மொழிந்த தீர்மானத்திற்குப் பதிலாக கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''இன்று (31–8–81) காலை சுமார் 11.50 மணி அளவில் சட்டமன்றப்பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப் பட்டுள்ள—

(1) மதுரை பசும்பொன் நகர், மதுரை பாண்டியன் தெரு 78–சி, சந்திரன் இல்லத்தில் இருக்கும் திரு. பி. டி. ராமு என்பவரின் மகன் பரமன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்,

(2) மதுரை–74, வைத்தியநாதபுரம் சித்தம்மாள் இல்லத்தில் இருக்கும் திரு. சிதம்பரம் பிள்ளை என்பவரின் மகன் சி. ராமகிருஷ்ணன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்

பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் ஒரு நாள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசன்மெண்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

(இ) பேரவை அலுவல்—அரசினர் சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசுத் தரப்பில் இன்னும் எட்டு சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படு வதற்காக இருக்கின்றன. இன்னும் அரைமணி நேரந்தான்

1981 ஆகஸ்ட் 31] [பேரவைத் தலைவர்]

இருக்கிறது. நாளைக்கு தனியார் அலுவல்கள் எடுத்துக் கொள்ளப் படவேண்டும். ஆகவே, இன்று மாலை 4.00 மணிக்கு அவை கூடி இந்த சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு முடித்து விடலாம்.

திரு. துரைமுருகன்: இன்று மாலையில் வைத்துக் கொள் வதற்குப் பதிலாக நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான்: இதைப் பற்றி பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: 8 பில்களை எப்படி இரண்டு மணி நேரத்திற்குள் முடிக்க முடியும், முடியாது. இன்னொரு நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரவர்கள் தொகுதிக்குப்போய் பார்க்க வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. ஆகவே மாலை 4 மணிக்கு வைத்து முடித்துவிடலாம்.

திரு. துரைமுருகன்: திடீர் திடீர் என்று வைக்கிறீர்கள். ஏன் அலுவல் ஆய்வுக் குழுவை கூட்டியிருக்கக்கூடாது. கூட்டியிருந் தால் நாங்கள் அங்கே வந்து இன்று மாலை முடியாது என்று சொல்லியிருப்போமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீர் என்று வைக்கவில்லை. அவைக்கு அறிவித்துவிட்டுத்தான் வைக்கிறோம்.

திரு. துரைமுருகன்: முடியாது சார். இன்று மாலை முடியாது.

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இன்னும் ஒரு பத்து நிமிடத்திலே நாங்கள் அதைப்பற்றிப் பேசி தங்களுக்கு அதைப்பற்றி தெரிவிக்கிறோம். அதற்குள் அடுத்த சட்ட முன்வடிவை எடுத்துக்கொண்டு முடிக்கலாம்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(ஈ) பச்சையப்பன் பொறுப்புக்கழக (நிர்வாகத்தை மேற் கொள்ளுதல்) குறித்த 1981-ம் ஆண்டு திருத்த சட்ட முன்வடிவு.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற் கொள்ளுதல்) குறித்த 1981 ஆம் ஆண்டு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1981) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.'

1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.